Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 230/2025** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **ஜோதிமுத்து ( சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**09.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது சென்னை மத்திய நுண்ணறிவு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.05.2023 ம் தேதி காலை 07.00 மணிக்கு நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அருப்புக்கோட்டை பாளையம்பட்டி திருவள்ளுவர் நகரை சேர்ந்த வேல்முருகன் மனைவி பாண்டீஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 129/2023 பிரிவு 279, 304A இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் நகலினை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2. பின்னர் அன்றைய தினம் காலை 06.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான அருப்புக்கோட்டை நாடார் மகமை எதிரே உள்ள சம்பவ இடம் அருகே சென்று சாட்சிகள் நித்தீஷ்வர், அகமது ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று

வாக்குமூலம் பதிவு செய்தேன். **( மாதிரி வரைபடம் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான பாண்டீஸ்வரி, ஜக்கதேவி, ராஜதுரை, கோபி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று பிரேத விசாரணை சாட்சிகள் பாண்டீஸ்வரி, ஜக்கதேவி முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு காலை 10.00 மணி முதல் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. பின்னர் மேற்படி பிரேத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவருக்கு தக்க வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பின்னர் மேல் விசாரணை வேண்டி வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 க்கு யார் மூலமாக விபத்து பற்றிய தகவல் கொடுக்கப்பட்டது என்று எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் ராஜதுரை தெரிவித்ததாக தெரிந்து கொண்டேன். விபத்தானது இரவு 11.30 மணியளவில் நடைபெற்றதாக எனது விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். மறுநாள் அதிகாலை 05.00 மணியளவில் தான் புகாரானது என்னிடம் கொடுக்கப்பட்டதாக வழக்கு ஆவணங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக ஒருவர் தான் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

2. புகார் மனுவினை எங்கு வைத்து யார் எழுதினார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சொன்ன முறையில் சொன்ன நாள் தேதி நேரத்தில் புகார் மனுவானது பெறப்பட்டு முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைபடமானது சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன முறையில் நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**